# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்)

**இலங்கை ஔடதங்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ரமேஷ் பத்திரண அவர்களால் 2015, நவெம்பர் மாதம் 27 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2015, நவெம்பர் மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[ 25 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## இலங்கை ஔடதங்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கை ஔடதங்கள் சங்கம்" என அழைக்கப்படுவதும் கீழ்க் குறிக்கப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க ஔடதவியலினதும் அத்துடன் தொடர்பான சகல அம்சங்கள் தொடர்பிலும் பாவிப் பதற்கும் அதன் பொது முன்னேற்றத்திற்காகவும், சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புடைய சகல நோக்கங்கள் மற்றும் விடயங்களை நிறைவேற்றுவதற்காகவும் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதற்குமுன்னர் அதிதிறமையுடன் கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கான தாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை ஔடதங்கள் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை ஔடதங்கள் சங்கத்தை கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை ஔடதங்கள் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக வுள்ளவர்களும் அல்லது இத்தால் கூட்டிணைப்பு செய்யப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகைய சகலரும் "இலங்கை ஔடதங்கள் சங்கம்" எனும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும்

இடையறாவழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு கூட்டுத்தாபனமாதல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் தனது தற்றுணிபின்படி அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையின் ஔடதவியலையும் அதன் உபயோகங்களையும் மேம்படுத்துவதுடன் முன்னேற்றுதலும் ;

(ஆ) நாட்டின் வளர்ச்சி அத்துடன் அபிவிருத்தி கருதி ஔடதவியலை உபயோகித்தலுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களிலும் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கலும், அரச கூட்டுத்தாபனங்களுக்கும், உள்ளூர் நிறுவனங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் சட்ட ஆலோசனை வழங்கலும் ;

(இ) (i) ஔடதவியல் அறிவினைப் பற்றி முக்கியமான தொடர்புகளையும், கலந்துரையாடல்களையும் வெளிப்படுத்துவதற்கான பொது மன்றம் ஒன்றாக இயங்குதல் ;

(ii) நூல்நிலையங்களை நிறுவிப் பராமரித்தல் ;

(iii) ஔடதத் தொழில் முன்னேற்றத்திற்கான விடயங்களை வெளியிடல் ;

(iv) மற்றும் பல வழிகளில் ;

ஔடதவியலுடன் சம்பந்தப்பட்ட அறிவை மேம்படுத்தி பரிமாறுதல் அத்துடன் பரப்புதல் ;

(ஈ) எல்லா மட்டங்களிலும் ஔடதவியலுடன் தொடர்பான கல்வியை மேம்படுத்தல் ;

(உ) ஔடதவியலின் மூல ஆராய்ச்சியை மேம்படுத்தலும் வளர்த்தலும், ஊக்குவித்தலும் ;

(ஊ) பலதரப்பட்ட உறுப்பாண்மைகளுக்குச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பதாரிகளின் தகைமை களை மதிப்பிடல் ;

(எ) சங்கத்தின் சகலதர உறுப்பாண்மைகளுக்குமான தேர்வுப்பரீட்சைகளை நடாத்துதலும் அல்லது நடாத்து வதற்கான ஒழுங்குகளை செய்தலும் அத்தகைய பரீட்சைகளுக்கான கற்கை பாடநெறிகளை மேம் படுத்தி அக்கற்கைகளை அங்கீகரித்து ஏனைய வசதிகளை வழங்கலும் ;

(ஏ) சங்கம் காலத்துக்குக்காலம் தேவையெனக் கருதும் ஔடதவியலின் துறைகளுக்கான டிப்ளோமா மற்றும் சான்றிதழ்கள் அத்துடன் மற்றைய சிறப்புத் திறன் களை அளிப்பதற்கான பரீட்சைகளை நடாத்துவதும் அல்லது நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய் வதும் அத்தகைய பரீட்சைகளுக்கான பாடநெறிகளை ஒழுங்குசெய்வதும், அங்கீகரிப்பதும் அல்லது ஏனைய வசதிகளைச் செய்தலும் ;

(ஐ) உறுப்பினர்களின் தொழில்சார் அலுவல்களும் பொது நடத்தை குறித்தும் மிக உயர்ந்த தரத்தை உறுப்பினர் கள் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தலும் ;

(ஒ) ஏனைய விஞ்ஞான மற்றும் தொழில்ரீதியான அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்தலும் ;

(ஓ) இலங்கையில் ஔடதவியலாளர் தொழிலின் தரத்தை நிலைநிறுத்தலும் மேம்படுத்தலும் ;

(ஔ) சங்கத்தின் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது எவையேனும் ஒன்றை நிறைவேற்றுவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது எதையேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கும் அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத் தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயல்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பு இல்லாமல் பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் துணைச் சட்டங்களுக்கும் அமைவாக, அத்தகைய விதிகளிலும் துணைச் சட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்ட பேரவையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது இச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் சங்கத்தின் பேரவையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகளும், துணைச் சட்டங்களும்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தினால் இடையிடையே ஆண்டுப் பொதுக்கூட்டமொன்றின்போது அல்லது விசேட பொதுக் கூட்டமொன்றின்போது அங்கத்துவத்தின் அவசியப்படும் பெரும்பான்மை வாக்குகளால் சங்கத்தின் அலுவல்களை முகாமைசெய்தலும் பின்வரும் சகல விடயங்களும் அல்லது எவ்விடயமேனும் அடங்கலாக அதன் நோக்கத்தை நிறை வேற்றிக்கொள்வதற்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனு மொரு எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாகவிராத விதிகளை அல்லது துணைச்சட்டங்களைத் தயாரித்தலும் சட்டமுறையானதாதல் வேண்டும் -

(அ) உறுப்பினர்களை வகைப்படுத்தல், சேர்த்துக்கொள் ளல், மீளப்பெறுதல் அல்லது வெளியேற்றுதல் ;

(ஆ) வேதனமின்றி சேவையாற்றுகின்ற அலுவலர்கள் கணக்காய்வாளர் மற்றும் பேரவை உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் ;

(இ) குழுக்களை நியமித்தல் :

கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், பிரதி நிதிகள் மற்றும் ஊழியர்களின் நடத்தை, அதிகாரங் கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(ஈ) பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதல், அவற்றை நடாத்துதல், அவற்றில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை நேரங்கள், இடங்கள், அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல்கள், கூட்ட நடப்பெண் மற்றும் கூட்டங்களில் கருமங்களைக் கொண்டுநடாத்துதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை நிர்வகித்தலும் முகாமைசெய்தலும் அதன் நிதியத்துக்குப் பொறுப் பாயிருத்தலும் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச்சட்டம் (1) ஆம் உட்பிரிவின்கீழான விதியொன்றை அல்லது துணைச்சட்டமொன்றை ஆக்கக்கூடியவாறு அத்தகைய ஒரு கூட்டத்தில் திருத்தம் செய்தல், மாற்றுதல், சேர்த்தல் அல்லது இரத்துச்செய்தல் செய்யப்பட வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும், துணைச்சட்டங்களுக்கும் அமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், சங்கத்திற்குக் கிடைக்கப்படவேண்டிய எல்லாக் கடன்கள், ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் யாவும் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டும்.

*அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களைக் கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.*

**8**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பனமூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரியதாக்கப்படக்கூடியவாறான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையேனும் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் தகுதியுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலிருக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான பணங்களைக் கடனாகப் பெற்றுக்கொள்ளவும் அல்லது திரட்டவும் கூட்டுத்தாபனம் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அப்பணங்களை மீளச் செலுத்துவதை உறுதிப்படுத்தும்பொருட்டு ஏதேனும் அடகு, பொறுப்பு அல்லது கடன் உறுதிப்பத்திரம் ஆக்குவதற்கும் எழுதிக் கைச்சாத்திடுவதற்கும், கையளிக்கவும், வழங்கவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தினத்தன்று சங்கத்துக்குச் சொந்தமான எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற சொத்துக்கள் யாவும் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

கட்டணங்களையும் உதவு தொகைகளையும் அறவிடுவதற்கான அதிகாரங்கள்.

**9.** (அ) சங்கத்தால் நடாத்தப்படும் ஏதேனும் மாநாடு பாடநெறி அல்லது பரீட்சைக்கு உட்சேர்த்துக் கொள்வதற்காக சங்கம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய கட்டணங்களும் ;

(ஆ) சங்கத்தின் ஏதேனும் உறுப்பாண்மை தரமொன்றுக்கு நபர்களை உட்சேர்த்துக்கொள்ளும் கட்டணங்களும் ;

(இ) சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்கு ஏற்புடையதாக சங்கம் நியாயமானதெனக் கருதும் அத்தகைய உதவுதொகைகளும் கட்டணங்களும்.

அறவிடும் ஆற்றல் சங்கத்தைச் சார்ந்திருக்க வேண்டும்.

ஆட்சேர்ப்பும், ஆசாரப் பண்பாட்டுக் குழுவும்.

**10.** ஆட்சேர்ப்பு மற்றும் ஆசாரப் பண்பாட்டுக் குழுவொன்றை நியமிப்பதற்காகவும் இலங்கையினுள் மருந்தாளர்களாக சேவையாற்றுபவர்களும் அதில் ஈடுபட்டுள்ளவர்களுமான நபர்களுக்கிடையில் தொழில்சார் தரங்களையும் ஒழுக்கத்தையும் பேணுவதற்காகவும் காலத்துக்காலம் தேவைப்படும் அத்தகைய வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்காக சங்கம் அதிகாரமுடையதாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, பேரவை காலத்துக்குக்காலம் நிலையியற் கட்டளைகளின்மூலம் அதிகாரம் வழங்கும் உறுப்பினர்கள் இருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டுமென்பதுடன், அவ்விதம் ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி யாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**12**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கைக் குடியரசினது உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிட்டவர்களும் அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**13**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்